JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

STC. No. 352/2025 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW–1– சுரேஷ் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 06th day of November 2025 | | | |

## Sworn Statement

நான் இந்த வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் லோகநாதன் என்பவர் மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். லோகநாதன் என்னிடம் அவரது தொழில் தேவைக்காக என்னிடம் ரூ.5,00,000/– கடந்த 2024 ஆம் வருடம், மார்ச் மாதம் கேட்டார். நான் 29.04.2024–ம் தேதின்று அவருக்கு ரூ.5,00,000/– கொடுத்தேன். நான் மேற்படி பணத்தை லோகநாதன் என்பவருக்க்கு 1 – 1/2/– வட்டிக்கு பணம் கொடுத்து அதன் முதல் வட்டி தொகை காசோலை தேதி வரை ரூ.30,000/– ஐ எனக்கு கொடுத்தார். அதன் பின்னிட்டு அவர் எனக்கு அவரது வங்கி கணக்கு உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா காசோலையை ஆகஸ்ட் மாதம், 29 ம் தேதி கொடுத்தார். காசோலையை கையொப்பமிட்டு எனக்கு நிரப்பிகொடுத்தார். அதன் பின்னிட்டு அந்த காசோலையை எனது வங்கி கணக்கு உள்ள ஸ்டேட் பேங்க், சித்தார் கிளையில் வசூலுக்கு தாக்கல் செய்தேன். மேற்படி காசோலையானது போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டது. நான் அது குறித்து எனது வழக்கறிஞர் மூலம் அவருக்கு அறிவிப்பு அனுப்பினேன். அறிவிப்பினை பெற்றுக் கொண்ட எதிரி எனக்கு பதில் அறிவிப்பு கொடுத்தார். அது முற்றிலும் பொய். எதிரி என்னை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியாக இந்த காசோலையை கொடுத்துள்ளார் எனவே இந்த புகாரினை கோப்பிற்கு எடுத்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி புகார் படி தீர்ப்பாக வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.11.06 18:07:09 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.